இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 258 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – சித்திரை 15 – திங்கள்கிழமை 28 ஏப்ரல் 2025 – வெளியூர் 16 பக்கங்கள்

Established : 10.8.1942 - Volume : 83 - Issue 258 : Thiruvalluvar Year - 2056 - Chithirai 15 - Monday 28 April 2025 - Dak 16 Pages ₹ 5.00


### 174வது பிறந்தநாள்: சர் பிட்டி தியாகராயர் திராவிட மாடல் ஆட்சிக்கு

# வலுவான அடித்தளம் அமைத்தவர்!



## முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

**சென்னை, ஏப்.28 -**

**இன்றைய நம் ‘திராவிட மாடல்’ ஆட்சிக்கு நூறாண்டுகளுக்கு முன்பே வலுவான கொள்கை அடித்தளம் அமைத்தவர் வெள்ளுடை வேந்தர் சர்.பிட்டி.தியாகராயர் என்று அவரது பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சமூக வலைதளப் பக்கத்தில் புகழாரம் சூட்டி பதிவிட்டுள்ளார்.**

திராவிட இயக்கத்தின் மூத்த முன்னோடி ஜஸ்டீஸ் பார்டியை (நீதிக்கட்சியை) தொடங்கிய மூவர்களில் ஒருவர் (டாக்டர் நடேசனார், டி.எம்.நாயர்) சர் பிட்டி தியாகராயர் ஆவார்கள்.

சர். பிட்டி. தியாகராயர் அவர்கள் முன்னதாக காங்கிரஸ் பேரியக்கத்தின் மீது பற்று கொண்டு சுதந்திர போராட்டத்தில் தீவிரம் காட்டி வந்தார். பின்னர் அக்கட்சியில் நிலவிய ஆதிக்க மனப்பான்மையை கண்டு கொதித்தெழுந்து வெளியேறினார். 1916ல் தென்னிந்திய நல உரிமை சங்கத்தை தோற்றுவித்தார்.

இதன் சார்பில் ’நீதி’ என்ற இதழை நடத்தி வந்தார். இதை தழுவியே ’நீதிக் கட்சி’ என்ற பெயரும் உருவானது.

இக்கட்சியின் தலைவராக சர் பிட்டி தியாகராயர் சிறப்பான முறையில் வழி நடத்தி வந்தார். இந்திய விடுதலை, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களின் முழு உரிமை மற்றும் பாதுகாப்பு, பிராமண எதிர்ப்பு ஆகியவற்றை தீவிரமாக முன்னெடுத்து



வந்தவர்.

வணிகத்தில் சிறந்து விளங்கிய செல்வந்த குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர் தியாகராயர். பி.ஏ. பட்டதாரியான இவர், நெசவாலையை தொடங்கி பெரிய அளவில் வேலைவாய்ப்பை உருவாக்கினார். தான் ஈட்டிய பொருளை ஏழை, எளியவர்களுக்கு வாரி கொடுப்பதில் வள்ளலாக திகழ்ந்தார்.

இதற்கு உதாரணமாக 1876ஆம் ஆண்டு பஞ்சத்தின் போது பசியோடு வந்தவர்களுக்கு உணவு வழங்கிய நிகழ்வை சொல்லலாம். குறிப்பாக தென்னிந்திய வர்த்தக வளர்ச்சி மற்றும் தொழில் பெருக்கத்திற்கு தியாகராயர் அவர்களின் பணிகள் அளப்பரியது. தன்னுடைய சொந்த வருமானத்தில் வண்ணாரப்பேட்டை பகுதியில் ஒரு பள்ளியை 1897ல் தொடங்கினார். அதற்கு ’வடசென்னை செகண்டரிப் பள்ளி’ எனப் பெயர் சூட்டினார்.

இங்கு அனைவருக்கும் இலவச கல்வி வழங்கப்பட்டது. இதுவே பின்னாளில் உயர்நிலைப் பள்ளியாகவும், சென்னை ‘சர் தியாகராயா கல்லூரி’யாகவும் உயர்ந்தது. இதுதவிர பல்வேறு பள்ளிகளையும், கல்லூரிகளையும், தொழில்நுட்ப பயிற்சி பள்ளிகளையும் நிறுவினார். 1920ஆம் ஆண்டு சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் செயல்பட்டு வந்த நகராட்சி பள்ளியில் முதன் முதலில் ‘மதிய உணவு திட்டத்தை’ கொண்டு வந்தார்.

மருத்துவக் கல்லூரியில் சேர சமஸ்கிருதம் படித்திருக்க வேண்டும் என்ற விதியை ரத்து செய்து, பிராமணர் அல்லாத மாணவர்களும் மருத்துவம் படிக்க வகை செய்தார். அண்ணாமலை செட்டியார் உடன் இணைந்து அண்ணாமலை பல்கலைக்கழகத்தை உருவாக்கினார். இவ்வாறு அளப்பரிய பணிகளை தனது வாழ்நாளில் செய்திருக்கிறார்.

**கவுன்சிலரானார்!**

சர் பிட்டி தியாகராயர் அவர்கள் 1882ஆம் ஆண்டு முதல் 1922ஆம் ஆண்டு வரை மதராஸ் மாநகராட்சி கவுன்சிலராக பணியாற்றினார். 1920ஆம் ஆண்டு முதல் 1923ஆம் ஆண்டு வரை மாநகராட்சியின் முதல் தலைவர் (President) ஆக இருந்தார். அவர் 1910ஆம் ஆண்டு மதராஸ் சட்டமன்றத்தில் உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1920ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், ஜஸ்டிஸ் கட்சி வெற்றி பெற்றது. ஆனால், தியாகராயர் முதல்வர் பதவியை ஏற்க மறுத்து, கட்சியின் தலைவராகவே தொடர்ந்தார்.

சர் பிட்டி தியாகராயர், 1909ஆம் ஆண்டு “ராவ் பஹதூர்” பட்டம் மற்றும் 1919ஆம் ஆண்டு “திவான் பஹதூர்” பட்டங்களை பெற்றார். 1921ஆம் ஆண்டு, அவர் “நைட்” (Knight) பட்டம் பெற்றார். சென்னையின் முக்கிய வர்த்தக மையமாக விளங்கும் பகுதிக்கு அவரது நினைவாக ‘தியாகராயர் நகர்’ என பெயரிடப்பட்டது. மதராஸ் மாநகராட்சியின் ரிப்பன் கட்டடத்தின் முன், அவரது சிலை நிறுவப்பட்டுள்ளது.

சர் பிட்டி தியாகராயர் அவர்கள் 1852ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27ஆம் நாள் பிறந்தவர். தனது வாழ்க்கையில் பெரும்பகுதியை மக்கள் பணிக்கும், சமூக சேவைக்கும் அரசியல் பணிக்கும் அர்ப்பணித்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூகவலைதளப் பதிவு!**

சர் பிட்டி தியாகராயர் அவர்களின் 174வது பிறந்த நாள் நேற்று.

வெள்ளுடைவேந்தர் சர் பிட்டி தியாகராயர் அவர்களின் 174வது பிறந்தநாளையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவு வருமாறு:-

- **கல்விக்கூடங்கள், தெருவிளக்குகள், குடிநீர் இணைப்பு, மதிய உணவுத் திட்டம் எனச் சென்னை மாநகரின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவர்.**
- **நீதிக்கட்சியின் நிறுவனர்களுள் ஒருவராக இருந்து, தன்னைத் தேடி வந்த முதலமைச்சர் பொறுப்பை மறுத்த மாண்பாளராக உயர்ந்தவர்.**
- **எவருக்காகவும் தன் இயல்பை மாற்றிக்கொள்ளாத ‘வெள்ளுடை வேந்தர்’ எனப் பெயரும் பெற்றவர்.**

**இன்றைய நம் திராவிடமாடல் ஆட்சிக்கு நூறாண்டுகளுக்கு முன்பே வலுவான கொள்கை அடித்தளம் அமைத்த எம் தியாகராயர் வழிநின்று தமிழ்நாட்டின் உயர்வுக்கு உழைப்போம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி

# தமிழ்நாடு முழுவதும் 86,000 பேருக்கு பட்டா: ஆண்டு வருமானம் ரூ.5 லட்சமாக உயர்வு!

## தமிழ்நாடு அரசு – அரசாணை வெளியீடு


**சென்னை, ஏப். 28 -**

**தமிழ்நாடு முழுவதும் ஆட்சேபகரமற்ற பகுதிகளில் வசிக்கும் 86ஆயிரம் பேருக்கு பட்டா வழங்குவதற்கான அரசாணையை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது. வருமான உச்சவரம்பு 3 லட்சமாக இருந்தது. தற்போது 5 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.**

சென்னையை சுற்றியுள்ள 4 மாவட்டங்களில் ‘பெல்ட் ஏரியா’ என்று கூறப்படும் 32 கி.மீ. பகுதிகளில் ஆக்கிரமிப்பு செய்து நீண்ட காலமாக குடியிருப்பவர்கள் பட்டா பெற முடியாமல் சிரமப்படுகின்றனர். இவ்வாறு ஆட்சேபம் இல்லாத புறம்போக்கு பகுதிகளில் 29,187 பேர் பட்டா இன்றி குடியிருக்கின்றனர். இது முதல்வரின் கவனத்துக்கு சென்றதை அடுத்து, இவர்களுக்கு பட்டா வழங்க அமைச்சரவை கூட்டத்தில் முடிவெடுத்துள்ளனர்.

பெல்ட் ஏரியா சட்டம் கடந்த 1962ம் ஆண்டு வந்தது. 1962 முதல் 2025 வரை அதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப் படாமல் இருந்தது.

இந்த நிலையில், பட்டா வழங்கும் பணிகளை 6 மாதங்களுக்



ABSTRACT

Land – Regularization of Residential encroachments and issuance of Free House Site Patta – Chennai City and its belt area (Chengalpattu, Kancheepuram and Tiruvallur areas) – As per ban imposed in G.O.(Ms) No.1135, Revenue Department dated 17.03.1962 for Chennai and its belt area – One Time Relaxation and Regularisation of residential encroachments in unobjectionable Porambokes within 16/8 km radius from District Head Quarters, Corporations, Municipalities and Town Panchayats – One Time Relaxation of ban as per RSO 21(1) – Orders issued in G.O.(Ms) No.97, Revenue and Disaster Management Department, dated: 21.02.2025 – Certain Amendments – Orders – Issued.

Revenue & DM [LD-1(1)] Department

G.O.(Ms) No.205 — Dated: 26.04.2025, [illegible] சித்திரை 13, திருவள்ளுவர் ஆண்டு 2056

Read:

1. G.O.(Ms) No.97, Revenue and Disaster Management Department, dated: 21.02.2025.
2. Cabinet Resolution dated 17.04.2025.
3. From the Commissioner of Land Administration Letter No.F3/11339/2018, Dated: 22.04.2025.

*****

ORDER:

In the reference first cited above, the Government have issued orders vide G.O.(Ms) No.97, Revenue and Disaster Management [LD-1(1)] Department, Dated: 21.02.2025 for one time relaxation of the ban imposed on issuance of house site assignments in Chennai and its Belt Areas and within the limits of District Head Quarters/ Corporation, Municipalities and 16Km / 8Km distance from the periphery of the District Head Quarters/ Corporation, Municipalities, Town Panchayat for regularization of residential encroachments which have been in existence for more than 10 years/5 years respectively in unobjectionable Government Poramboke lands under Special Regularization Scheme.

A few representations and feedback were received with reference to the implementation of One-time Special Regularization Scheme.

(a) The maximum extent prescribed for the regularization and grant of free House Site Patta in Chennai, Avadi and Tambaram Corporation limits may be enhanced from 1 Cent to 2 Cents, on par with the extent permitted in other corporations.

(b) As per the G.O.(Ms) No.318 Revenue & Disaster Management Department dated 30.08.2019, the Government had fixed the Annual Income Limit at Rs.3,00,000/- as the income limit for free house site patta to encroachers. Since the Government Orders were issued more

குள் முடிக்க முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இதற்காக, மாவட்ட அளவில் ஒரு குழுவும், சென்னையில் மாநில அளவில் ஒரு குழுவும் அமைத்து உடனடியாக அந்த பணிகளை தொடங்கவும் அறிவுறுத்தியுள்ளார். 4 மாவட்ட மக்களுக்கும் இது மிகப் பெரிய வரப்பிரசாதம்.

**மதுரை - நெல்லை மாநகராட்சிகள்!**

மதுரை, திருநெல்வேலி போன்ற மாநகராட்சிகளிலும் இதேபோல பிரச்சினை இருக்கிறது. அங்கு இருப்பவர்களுக்கும் பட்டா வழங்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார். குறிப்பாக, மாநகராட்சி, நகராட்சி, மாவட்ட தலைநகரங்களில் ஆட்சேபம் இல்லாத புறம்போக்கு பகுதிகளில் குடியிருந்து வரும் 57,084 பேருக்கு பட்டா வழங்க அறிவுறுத்தியுள்ளார்.

அந்த வகையில், சுமார் 86 ஆயிரம் பேருக்கு 6 மாதங்களுக்குள் பட்டா வழங்குமாறு முதல்வர் அவர்கள் கூறியிருந்தார். இது தவிர, யாராவது விடுபட்டிருந்து மனுக்கள் கொடுத்தால் அதையும் பரிசீலிக்குமாறு அறிவுறுத்தியிருந்தார்.

**அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல்!**

இதை தொடர்ந்து தற்போது சென்னை மற்றும் மதுரை உள்ளிட்ட சில மாநகராட்சி பகுதிகளில் ஆட்சேபகரமற்ற புறம்போக்கு நிலங்களில் வசிக்கும் 86 ஆயிரம் பேருக்கு பட்டா வழங்குவதென முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மாநிலம் முழுவதும் பட்டா வழங்குவதற்கான கணக்கெடுப்புப் பணிகளை வருவாய்த்துறை அதிகாரிகள் மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையில், தமிழ்நாடு முழுவதும் ஆட்சேபகரமற்ற பகுதிகளில் வசிக்கும் 86ஆயிரம் பேருக்கு பட்டா வழங்குவதற்கான அரசாணையை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில், 532 கிராமங்களை சேர்ந்த, 29ஆயிரத்து 187 குடும்பங்கள், பிற மாவட்டங்களில், 57ஆயிரத்து 84 குடும்பங்களுக்கு பட்டா வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது.

சில வகை புறம்போக்கு நிலங்களில், 10 ஆண்டுகளுக்கு மேலாக வசிப்போருக்கு பட்டா வழங்க, ஆண்டு வருமானம், 3 லட்சம் ரூபாயாக இருந்தது.

இந்த வரம்பு தற்போது, 5 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது என்று தமிழ்நாடு அரசு - அரசாணையை வெளியிட்டுள்ளது.

---

### சென்னையில் முட்டுக்காடு பகுதியில் அமைகிறது!

# உலகத் தரத்தில் ரூ. 525 கோடியில் கலைஞர் பன்னாட்டு அரங்கம்!

## கட்டுமான பணியை அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு!

*சென்னை, ஏப். 28 -*

*சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் உலகத் தரத்தில் அமைய உள்ள, கலைஞர் பன்னாட்டு அரங்கம் அமைக்கும் பணியினை பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.*

*சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் முட்டுக்காடு பகுதியில் 3 லட்சம் சதுர அடி பரப்பளவில் சர்வதேச கண்காட்சிகள் மற்றும் பன்னாட்டு கூட்டங்கள் நடத்திடும் வகையில் நவீன வசதிகளுடன் உலகத்தரத்தில் கலைஞர் பன்னாட்டு அரங்கம் அமைக்கப்படும் என சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டது.*

*525 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான இந்த திட்டத்தின் கீழ், 5 ஆயிரம் இருக்கைகள் கொண்ட மாநாட்டுக் கூடம், 10,000 பேர் பார்வையிடும் வசதி கொண்ட கண்காட்சி அரங்கம், கூட்ட அரங்குகளுக்கான அரங்கம் ஆகியன அமைய உள்ளன.*

*இந்நிலையில், உலகத் தரத்தில் அமைக்கப்பட உள்ள இந்தப் பணியை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு மேற்கொண்டார்.*

*இந்த ஆய்வின் போது பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை உயர் அதிகாரிகள், தலைமை பொறியாளர்கள் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.*

---

### பஹல்காம் தாக்குதல் குறித்து விவாதிக்க

# நாடாளுமன்றத்தை கூட்ட வேண்டும்!

## மூத்த வழக்கறிஞர் கபில் சிபல் எம்.பி. வலியுறுத்தல்!

*புதுடெல்லி, ஏப். 28 -*

*பஹல்காம் தாக்குதல் குறித்து விவாதிக்க நாடாளுமன்றத்தை கூட்ட வேண்டும் என மாநிலங்களவை உறுப்பினரும் மூத்த வழக்கறிஞருமான கபில் சிபல் வலியுறுத்தி உள்ளார்.*

*இது குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள மூத்த வழக்கறிஞர் கபில் சிபல் எம்.பி.,*

*இந்தியா மீது அடுத்தடுத்து பயங்கரவாத தாக்குதலை பாகிஸ்தான் நடத்தி வருவதாகவும், இது தொடர்பாக நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தொடர் ஒன்றை நடத்தி கண்டன தீர்மானம் நிறைவேற்றுமாறு பிரதமரை கேட்டுக் கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.*

*இது நாட்டின் இறையாண்மை மீது நடத்தப்பட்ட தாக்குதல் என்றும், எம்.பி.க்கள் அடங்கிய குழு ஒன்றை முக்கியமான நாடுகளுக்கு அனுப்பி பாகிஸ்தான் மீது அழுத்தத்தை அதிகரிக்க வேண்டும் என்றும் கபில்சிபல் கேட்டுக்கொண்டு உள்ளார்.*